தேவையிருக்கிறதோ, அங்கெல்லாம் ஹிந்தி ஆசிரியர்கள் வைக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். மத்திய அரசாங்கம் உதவி அளிக்கிறது.

ஆசிரியர்கள்

*** 49 கேள்வி—திரு. செ. மாதவன் (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி சார்பாக)** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இதற்குமுன் கேரள அரசாங்கத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஆசிரியர்களின் பணி சென்னை அரசாங்கத்தின்கீழ் முறைப்படுத்தப்பட்டுவிட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

The services of teachers who were working previously under the Travancore-Cochin State and who were allotted to this State have been regularised in the Madras Educational Subordinate Service.

பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள்

*** 51 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நகரங்களில் வேலை பார்க்கும் ஸ்தல ஸ்தாபன ஊழிர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுப்பது போல கிராமப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கும் வீட்டுவாடகை அலவன்ஸ் கொடுக்கப்படாதது ஏன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The main criteria for sanctioning House Rent Allowance are population, availability of housing accommodation, levels of house-rent and the number of Government Offices located in the place. On the basis of the above criteria, places have been classified into three groups. Madras City and its suburbs have been included in Group I, mufassal municipalities with population exceeding 50,000 in Group II and all other Municipalities, taluk headquarters and certain specified places, in Group III. The rate of House Rent Allowance sanctioned are according to the Group under which a particular place falls. In accordance with this scheme, neither the Government nor the employee of panchayat unions stationed in villages are allowed House Rent Allowance.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் அமைந்து இருக்கக் கூடிய நகரங்கள் விரிவடைந்து வருகின்றன. ஏராளமான உத்தியோகஸ்தர்கள் இருக்கக்கூடிய நகரங்கள் இருப்பதால் அங்கெல்லாம் அவர்களுக்கு அலவன்ஸ் கொடுக்க, அந்த வாய்ப்பை அவர்களுக்கு அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?